

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரைவில் திறந்து வைக்கவிருக்கும் ஜானகிபுரம் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களின் மணிமண்டபம் மற்றும் 21 சமூகநீதி போராளிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள மணி மண்டபங்களின் கட்டுமான பணிகளையும் , திருவெண்ணெய்நல்லூர் எல்லீஸ் சத்திரம் அணையையும் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சியர் சி பழனி. மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட எஸ்.பி தீபக்சுவாச், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், நகர செயலாளர் இரா.சக்கரை ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர் சு விசுவநாதன் , தே.முருகவேல், வே.கணேசன், கு.செல்வமணி, வி.ஜி.பிரபாகரன், பேரூர் செயலாளர் பா ஜீவா, ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல் , நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, மாவட்ட வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!

*சேலம், நவ. 18-*

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் இன்று (18.11.2024 திங்கள் கிழமை) காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையிலும், தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் 081 - கெங்கவல்லி க.ஆனந்த், விழுப்புரம் வடக்கு மாவட்ட



இளைஞர் அணி அமைப்பாளர், 082 - ஆத்தூர் எம்.எஸ். கணேஷ்குமார், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 083 - ஏற்காடு சி.ஆனந்தகுமார், மாநில இளைஞர் அணி துணை செயலாளர், 091 - வீரபாண்டி டி.கே.கிருபாகரன், ஈரோடு வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் அமைப்பாளர்கள், வாக்குசாவடி முகவர்கள் BLA-2 மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** வருகின்ற நவம்பர் 27ம் தேதி கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா,

வாக்குச்சாவடி கமிட்டி (BLC) அமைப்பது.

வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் சிறப்பு முகாம் நவம்பர் 23, 24 தேதியில் நடைபெறுவது தொடர்பாக

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சேலம் அரசிபாளையத்தில்

# 355 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

*சேலம்,நவ.18-*

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம், அரிசிபாளையம் செயிண்ட் மேரிஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2024-25-ஆம் கல்வி ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டிகளை மாணவிகளுக்கு நேற்று (16.11.2024) வழங்கினார். பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அரசின் பல்வேறு துறைகளில் சிறப்பான நிருவாகத்தை வழங்கி வருகிறார்கள்.

அதன்படி, தமிழ்நாடு பல்வேறு துறைகளில் இந்திய அளவில் முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டில் மற்ற துறைகளைக் காட்டிலும் பள்ளிக்கல்வித் துறைக்கென கடந்த மூன்றரை ஆண்டுகளில் அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000/- வழங்கும் வகையில் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.36,000/- எனவும், ஐந்து ஆண்டுகள் படித்தால் ரூ.60,000/- என்ற வகையிலும் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் தொடர்ந்து இது போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறார்கள்.

அந்தவகையில், சேலம் மாவட்டத்தில் 2024-25-ஆம் கல்வி ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் 11,726 மாணவர்களுக்கும், 14,548 மாணவிகளுக்கும் என மொத்தம் 26,274 மாணாக்கர்களுக்கு ரூ.12.43 கோடி மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் வகையில் இத்திட்டம் கடந்த 29.10.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்தொடர்ச்சியாக, இன்றையதினம் சேலம், அரிசிபாளையம் செயிண்ட் மேரிஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இப்பள்ளியை சேர்ந்த 355 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிள் வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற தமிழ்நாடு அரசால் செயல்படுத்தக்கூடிய பல்வேறு திட்டங்களை பள்ளி மாணவ, மாணவிகள் நல்லமுறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வில் சிறந்த நிலையை அடைய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், முதன்மைக்கல்வி அலுவலர் முனைவர் மு.கபீர், மாமன்ற உறுப்பினர் திருமதி.சவிதா பிரகாஷ் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாணவிகள் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுக்கா கோனை கிராமத்தில் நடந்த வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாமில் பெயர் சேர்க்க பழங்குடியின மக்கள், செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ முன்னிலையில் தாசில்தார் ஏழுமலையிடம் மனு கொடுத்தனர். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,தொகுதி பார்வையாளர் அப்துல் மாலிக், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதல் அமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின் படி, தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் செய்தலுக்கான வாக்காளர் சிறப்பு முகாம். வடக்கு சட்டமன்றத் தொகுதி, மணியகாரன்பாளையம் பகுதி, வார்டு எண் 19. மணியகாரன்பாளையம், மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள ,வார்டு எண்:19 பூத் எண்கள் 221 TO 231 வரையிலான வாக்குச்சாவடிகளை,16112024, சனிக்கிழமை காலை 11.40 மணியளவில், கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் EX.எம்எல்ஏ., அவர்கள் நேரில் சென்று, வாக்காளர் பட்டியலில் விடுபட்டவர்கள் புதிதாக பெயர் சேர்க்கவும் , பெயர் மற்றும் முகவரி திருத்தம் செய்யவும் , பெயர் நீக்கம் செய்திடவும், வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்று வரும், வாக்காளர் சிறப்பு முகாமை, பார்வையிட்டார். இந்நிகழ்வில், மணியகாரன்பாளையம் பகுதிச் செயலாளர் அஞ்சுகம் பழனியப்பன்,19 வது வட்டக் கழகச் செயலாளர் குமார் ,BLA 2 நிர்வாகிகள்,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## செஞ்சி தொகுதியில்

# வாக்காளர் பட்டியல் திருத்தம் முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. – அப்துல் மாலிக் ஆய்வு!

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தொகுதி செஞ்சி ஒன்றியம் கோனை ஊராட்சி அரசு நடுநிலைப்பள்ளிகளில்நடைபெற்ற வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர்சேர்த்தல் , நீக்குதல் மற்றும் திருத்தம் செய்ததற்கான முகாமினை செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் ,செஞ்சி சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும் மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர்நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் போது செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மண்டல துணை வட்டாட்சியர் மலர்விழி,.வருவாய் ஆய்வாளர் கோவிந்தன்,கிராம நிர்வாக அலுவலர் ராஜா .ஒன்றியவை தலைவர் ஆறுமுகம், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, முன்னாள் கவுன்சிலர்ரேவதி கணேசன், நிர்வாகிகள் மகேஷ், பாலமுருகன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டத்தில் வாக்காளர் சிறப்பு முகாமையெரட்டி. ‘மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 42வது கோட்டத்தில் வாக்கு சாவடியை பார்வையிட்டார். உடன் தொகுதி பார்வையாளர். பி.ஏ. ஆர். இளங்கோவன், மாநகர துணைச்செயலாளர். வி.கணேசன், பொருளாளர் ஷெரீப், எஸ். ஆர்.அன்வர் விவசாய அணி அமைப்பாளர் இரா. சந்திரன், பகுதி செயலாளர் கே.ஜெய், கோட்டச் செயலாளர் சத்யன் ஆகியோர் இருந்தனர்.

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில்

# நாகையில் அனைத்துத்துறை அலுவலர்களுக்கான திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வுக்கூட்டம்!

## என்.கௌதமன் – உ.மதிவாணன் பங்கேற்பு!

*நாகை. நவ 18.*

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலக முதன்மை கூட்ட அரங்கில் அனைத்துத்துறை அலுவலர்களுக்கான திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்தான ஆய்வுக்கூட்டம் மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. ஆய்வு கூட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன், மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகமது ஷா நவாஸ் அவர்கள், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகைமாலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் வளர்ச்சித்திட்டப் பணிகளை கண்காணித்து துரிதப்படுத்திட அமைச்சர் பெருமக்களை நியமித்துள்ளார்கள். அதனடிப்படையில் இன்றையதினம் நாகை மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் தொடர்பாக துறை வாரியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மக்களிடம் பெறப்படும் கோரிக்கை மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும். நகராட்சி, பேரூராட்சி, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்,அரசு மருத்துவமனைகளை தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அனைத்து வளர்ச்சித்திட்டப்பணிகளும் தொடர்ந்து கண்காணித்து செயல்படுத்திட தொடர் நடவடிக்கையாக மேற்கொள்ளப்படும். குறிப்பாக சாதாரண மக்களுக்கு தேவையான இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் ஒய்வூதியம் உள்ளிட்டவைகள் குறித்த பயனாளிகளை தேர்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் கலைஞரின் கனவு இல்லம், ஊரக குடியிருப்புகள் பழுது நீக்கம், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், தூய்மை பாரத இயக்கம், ஜல் ஜீவன் மிஷன் திட்டம் மற்றும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளின் விவரங்கள், அவற்றின் தற்போதைய நிலை ஆகியவற்றை கேட்டறிந்தார். பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டு வரும் பாலங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள் உள்ளாட்சித் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சிப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். தற்பொழுது நிலுவையில் உள்ள திட்டப்பணிகளை விரைந்து முடித்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என தெரிவித்தார்.

பின்னர் பொது நூலகம் இயக்ககம், மாவட்ட நூலக ஆணைக்குழு சார்பில் 50 ஆயிரத்திற்கு அதிகமான நூல்களால் தன் இல்லத்தையே மாபெரும் நூலகமாக மாற்றி இருக்கும் வேதாரண்யம் வட்டம் கருப்பம்புலத்தைச் சேர்ந்த ஆசிரியர் .சு. பாலாஜி என்பவருக்கு 2024 ஆண்டிற்கான சொந்த நூலகத்திற்கான விருதினை மாவட்ட பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பின் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்.

இந்தஆய்வின் போது தலைமை செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன், நகர்மன்ற தலைவர்கள் இரா. மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, ஒன்றிய கழக செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், மகா.குமார், உதயம் வே.முருகையன், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் எல்.எஸ்.ஈ. பழனியப்பன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமா மகேஸ்வரிசங்கர், ஒன்றிய குழு தலைவர்கள் ஆர். ஜி. தமிழரசி, வாசுகி நாகராஜன், செல்வராணி ஞானசேகர், கீழ்வேளூர் பேரூராட்சி தலைவர் இந்திரா காந்தி சேகர், நாகூர் நகர கழக செயலாளர் எம். ஆர். செந்தில்குமார், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், மற்றும் மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



உதகை நகரத்திற்கு உட்பட்ட ஹோபாட் பள்ளி வாக்குச்சாவடியில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மேற்கொள்ள நடைபெறும் சிறப்பு முகாம் பணிகளை மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் அவர்கள் பார்வையிட்டபோது. உடன் உதகை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தென்றல் செல்வராஜ், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, உதகை நகரமன்ற தலைவர் வாணீஸ்வரி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நாகராஜ், பாக நிலை முகவர்கள் வெங்கடேஷ், பாபு, பரமேஸ்வரி, மத்தீன் மற்றும் பலர் உள்ளனர்.



தர்மபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் மேற்கு ஒன்றியம், பிக்கணஅள்ளி அண்ணாமலை அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த வாக்குச்சாவடிகளில் ஒன்றிய கழகச் செயலாளர் வழக்கறிஞர் எம்.வி.டி.கோபால் தலைமையில் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும் மாநில விவசாய அணி துணைச் செயலாளருமான டி.எம். அரியப்பன் வாக்காளர் சேர்த்தல் நீக்கல் தொடர்பான தகவல்களை ஆய்வு செய்தார்.